
# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை



## பகுதி II

34

ஸ்ரீலங்காவின் ஆட்சியதிகாரம் பிரித்தானியர் கைகளில் இருந்தபோது, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மீதான வெறுப்பும், அவர்களை நாடுகடத்த வேண்டும் என்ற உணர்வும் பௌத்த சிங்கள தேசியவாதிகளுக்கு பெரியளவுக்கு இருக்கவில்லை.

# 'தோட்டத்தொழிலாளர்களை நாடுகடத்த நடந்த பேச்சுவார்த்தைகள்'



ஏற்கனவே இந்தத் தொடரில் குறிப்பிட்டது போல்; மலையகத் தோட்டத் தொழிலாளிகளுடன் இலங்கைக்கு வந்த நாட்டுக் கோட்டை செட்டிமார்கள், மற்றும் மார்வாடி வணிகர்கள், மலையாளிகள் மீதே பௌத்த சிங்கள தேசியவாதிகள், அதிகளவு காழ்ப்புணர்ச்சியும், வெறுப்பும் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் அவர்களால் இவர்களது பொருளாதார நலன்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டதேயாகும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் 'கூலிகள்' என்று அடையாளமிடப்பட்டு கொத்தடிமைகளைப்போல் 'வேலை வாங்கப்பட்டதால் சுதந்திர மனிதர்களாக இருந்த கண்டிய சிங்கள விவசாயிகள் அவர்களது நிலங்களிலிருந்து வெள்ளை நிர்வாகத்தால் விரட்டப்பட்ட நிலையிலும் (அவ்வாறு விரட்டப்பட்டவர்கள் சிறு தொகையினர் என்பது முக்கியமானது) மலையகத் தோட்டங்களில் சென்று வேலை செய்வதற்கு அவர்களது சாதியப் பெருமை இடந்தரவில்லை. 1930, 1940 தசாப்த காலத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்ட சூழ்நிலைகளிலும் சிங்கள விவசாயிகள், வேலை செய்வதற்கு 'உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த' மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து பொறாமைப்பட்டாலும் கூட அவர்களது வேலையைத் தாங்கள் செய்வது இழிவானது என்றே கருதினார்கள்.

இந்திய அரசாங்கம், இக்காலகட்டத்தில் தொழிலாளர்களின் இடப் பெயர்வுக்கு தடை விதித்தபோது பௌத்த சிங்கள தேசியவாதிகள் அத்தடையை நீக்கவேண்டுமென்று ஜவகர்லால் நேருவுக்கு கோரிக்கை விடுத்ததும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பு, 'பௌத்த சிங்கள தேசத்தின்' உருவாக்கத்திற்கு அவசியமென்று அவர்கள் உணர்ந்திருந்ததே அதற்குக் காரணமாகும்.

ஆனால் 1948-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் திகதி ஆட்சியதிகாரம் 'கோட் சூட்' போட்ட வெள்ளைப் பிரபுக்களின் கைகளிலிருந்து, கோட் சூட் போட்ட 'பொது நிற மற்றும் கறுப்பு'த் (சிங்களத்) துரைமாரினதும், கனவான்களினதும் கைகளுக்கு மாறிய பின் நிலைமை தலைகீழாகியது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தரகு முதலாளித்துவக் கனவான்கள், வெள்ளைத் தோட்டத்துரைமாரின் இடத்தை தங்களது வர்க்கத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நிரப்புவதிலும், நிர்வாகத்துறை மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் பதவிக்கு; சிங்கள 'நடுத்தர வர்க்கத்தினரை' வேலைக்கு அமர்த்துவதிலும் கவனம் செலுத்தினார்கள்.

தோட்டத் தொழிலாளர்களைத் தொடர்ந்து 'கூலிகளாக' வைத்திருக்க அவர்கள் விரும்பினார்கள்.

ஆனால் பௌத்த சிங்கள தேசியவாத நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, பெருந்தோட்ட சுவீகரிப்பு என்ற போர்வையில் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கும், நாடு கடத்துவதற்கும் முயன்றது. அதாவது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிறப்பு வீத அதிகரிப்பானது எதிர்காலத்தில் பௌத்த சிங்கள தேசியவாத நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர்கள் அஞ்சினார்கள்.

அதனால் நல்ல இலாபத்தில் இயங்கிய தோட்டங்களை வைத்துக் கொண்டு, நட்டத்தில் இயங்கிய தோட்டங்களை மூடி - அதை கண்டிய சிங்கள விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க முயன்றனர். இதை கண்டிய சிங்கள விவசாயிகள், பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் 'இழந்த நில உரிமையை மீளப் பெறும் நடவடிக்கை' என்று பிரகடனப்படுத்தவும் செய்தனர். இவ்வாறு மூடப்படும் தோட்டங்களில் வேலையிழக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு கணிசமான அளவு தொழிலாளர்களை சட்ட ரீதியாக நாடு கடத்தவும் முயன்றனர்.

தொடக்க காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூட, சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிற்காலத்தில் கடைப்பிடித்த தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்துவது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களுடைய வர்க்க நலனுக்கு புறம்பாக அவர்கள் அதை செய்ய முற்பட்டதற்குக் காரணம், பிற்காலத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கிய S.W.R.D பண்டாரநாயக்கா உட்பட்ட பலர் அப்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்ததேயாகும்.



1953-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் டட்லி சேனநாயக்கா இந்தியப் பிரதமர் நேருவுடன் இதற்கான 'முதலாவது பேச்சுவார்த்தையை' நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போது இந்தியா 3 இலட்சம் பேரை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மிகுதிப்பேருக்கு இலங்கைக்குடியுரிமை வழங்கப்படுமென்றும் டட்லி சேனநாயக்கா தெரிவித்திருந்தார். இதில் 3 இலட்சம் பேரை இந்தியா கட்டாயம் திருப்பி அழைக்க வேண்டும் என்பதில் உள்ள 'கட்டாயம்' என்ற பதத்தை இந்தியப் பிரதமர் நேரு ஏற்றுக்கொள்ளாததால் இப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

மீண்டும் 1954-ம் ஆண்டு சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமராக இருந்தபோது நேருவுடன் புதுடெல்லியில் வைத்து மற்றொரு பேச்சுவார்த்தை நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் இந்தியாவை விட்டு வேளியேறியவர்கள் இந்தியப் பிரசைகள் அல்ல என்றும் இந்தியா வாதாடியது. அவர்கள் இந்தியப் பிரசைகளாக இருந்தால் அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் பதிவு செய்து இந்தியக் கடவுச் சீட்டை பெற்றிருக்க வேண்டும் என்று இந்தியா கூறியது.

**3 இலட்சம் பேரை இந்தியா கட்டாயம் திருப்பி அழைக்க வேண்டும் என்பதில் உள்ள 'கட்டாயம்' என்ற பதத்தை இந்தியப் பிரதமர் நேரு ஏற்றுக்கொள்ளாததால் இப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.**

அப்போது இலங்கையில் இருந்த 10 இலட்சம் (எண்ணிக்கை ஏறக்குறைய) தோட்டத் தொழிலாளர்களில் 53 ஆயிரம் பேர் மட்டுமே இந்தியக் கடவுச் சீட்டைப் பெற்றிருந்தனர். இதனால் இந்தப் பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிந்தது.

1964-ல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது பர்மாவிலிருந்தும் உகண்டாவிலிருந்தும் இலட்சக் கணக்கான இந்தியர்கள் அவ் அரசாங்கங்களினால் வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். இந்த 'முன் மாதிரியை' தனக்கு 'சாதகமாக' எடுத்துக்கொண்ட திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா, இலண்டனில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் 'இந்தியா பர்மாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 3 இலட்சம் இந்தியர்களை ஏற்றுக்கொண்டது போல், இலங்கையிலுள்ள இந்தியர்களையும் இந்தியா திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றோம்' என்றும் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தியாவின் பகையாளியான பாகிஸ்தான், இலங்கையில் இருந்த 5749 பாகிஸ்தானியர்களையும் திருப்பி அழைத்துக் கொண்டது மட்டுமல்லாமல்- இந்தியா தனது அயல்நாடு, எதனுடனும் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்துக் கொண்டதில்லை என்றும் குற்றம் சாட்டியிருந்தது.

1962-ல் நடைபெற்ற இந்திய - சீன யுத்தத்துக்குப் பின்பு, இந்தியா இலங்கையுடன் நெருக்கமான உறவை வைத்திருக்க விரும்பியது.

இந்த நிலையில் ஜவகர்லால் நேரு காலமானதும், லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக வந்தார்.

1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் திகதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவருடன் இலங்கையில் உள்ள இந்தியத் தொழிலாளர்களை நாடு கடத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார்.

- நக்கீரன்